2021 ஜூன் 22]

(ஆ) திரு. கி. ராஜநாராயணன், பிரபல எழுத்தாளர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கரிசல் இலக்கியத்தின் பிதாமகர், கி.ரா. எனப் போற்றப்படும் புகழ்பெற்ற எழுத்தாளர் திரு. கி. ராஜநாராயணன் அவர்கள், 17–5–2021 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

தமிழ் இலக்கியத்திற்குச் செழுமை சேர்த்த கரிசல்காட்டு எழுத்தாளர் திரு. கி. ராஜநாராயணன், தனது பட்டறிவால் பல இலக்கியப் படைப்புகளைத் தந்தவர். வட்டார வழக்கு சார்ந்த இலக்கியப் படைப்புகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர். 'கோபல்லபுரத்து மக்கள்' என்ற நாவலுக்காக சாகித்ய அகாடமி விருது பெற்றவர்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், சக படைப்பாளிகளுக்கும், வாசகர்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(இ) திரு. கி. துளசி அய்யா வாண்டையார், சுதந்திரப் போராட்ட வீரர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுதந்திரப் போராட்ட வீரரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான "கல்விக் கண் திறந்த வள்ளல்" எனப் போற்றப்படும் திரு. கி. துளசி அய்யா வாண்டையார் அவர்கள், 17–5–2021 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

திரு. கி. துளசி அய்யா வாண்டையார் அவர்களின் பாரம்பரியத்தினரால் தொடங்கப்பட்ட பூண்டி புஷ்பம் கலை அறிவியல் கல்லூரியின் தாளாளராக இருந்து, ஏழை, எளிய மாணவர்களுக்கு இலவச உயர் கல்வி வழங்கியதன் காரணமாக தஞ்சை அறிவுக் களஞ்சியமாகச் செழித்துள்ளது. இவர் 1991–1996 ஆம் ஆண்டுகளில் தஞ்சாவூர் மக்களவைத் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றியவர்.